10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 265 செவ்வாய்க்கிழமை 13 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



## நாடு திரும்பினார் கோத்தபாய

கொழும்பு, பெப். 13
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார். 06▶

## இணைந்து செயற்படுங்கள்!

### தமிழ் கட்சிகளுக்கு யாழ். ஆயர் அழைப்பு



யாழ்ப்பாணம், பெப். 13
"தமிழ் மக்களின் இன்றைய நிலை - அவர்களின் அவசியத் தேவைகள் - முன்னுரிமைகள் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு எல்லா வேறுபாடுகளையும் மறந்து தமிழர்கள் என்ற ரீதியில் இணைந்து செயலாற்றுங்கள்."

இவ்வாறு தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை. 06▶

## ஒன்றிணைந்து செயற்படுவோம்


### தமிழ்க் கட்சிகளுக்கு சம்பந்தன் அழைப்பு



திருகோணமலை, பெப். 13
"எதிர்கால நடவடிக்கைகள் அனைத்தையும் முன்னெடுத்துச் செல்ல தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம்".

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் 06▶

# ஐ.தே.க.தனித்து ஆட்சி



## த.தே.கூட்டமைப்பு ஆதரவு
## சு.க. அமைச்சர்கள் தாவுவர்

கொழும்பு, பெப்ரவரி 13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தன்னுடன் ஏற்கனவே இணைந்துள்ள கட்சிகளையும் சேர்த்து ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைக்க உரிமை கோரவுள்ளது.

தனது பெரும்பான்மையை நிரூபிக்கும் விவரங்களை நாளை மறுதினம் வியாழக்கிழமை அக்கட்சி வெளியிடும் என எதிர்பார்க்கலாம் என அக்கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

அமையவுள்ள புதிய அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவை வழங்கினாலும், எந்த ஒரு அமைச்சுப் பொறுப்பையும் அது பெறாது 06▶

## முன்னாள் டி.ஐ.ஜிக்கு 5 வருடங்கள் சிறை



கொழும்பு, பெப். 13
முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தனவுக்கு ஐந்து ஆண்டு சிறைத் தண்டனையும் 06▶

## நாடாளுமன்றை கலையுங்கள்

### வெற்றி மமதையில் மகிந்த கோஷம்



கொழும்பு, பெப்.13
நாட்டில் காணப்படும் நிலையற்ற தன்மையை முடிவுக்குக் கொண்டுவர நாடாளுமன்றத்தைக் கலையுங்கள். எனக் கூறியிருக்கிறார் முன்னாள் ஜனாபதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வெற்றியை அடுத்து நேற்று அவரின் கட்சி அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை அவர் நடத்தினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பெற்ற வெற்றி வரலாற்று வெற்றியாகும். 232 உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றியுள்ளோம். இரு பிரதான கட்சிகளும் 06▶

## தொடர்ந்தும் போராடலாம்

### கேப்பாபிலவு மக்களுக்கு நீதிமன்று அனுமதி

முல்லைத்தீவு, பெப். 13
காணி மீட்புக்காகப் போராடி வரும் கேப்பாபிலவு மக்கள் ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாது போராட்டத்தைத் தொடர முடியும் என முல்லைத்தீவு நீதிமன்றம் ஆணை வழங்கியுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினமான கடந்த 4 ஆம் திகதி கேப்பாபிலவு மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். இதைப் பொலிஸார் தடுத்திருந்தனர்.

இந்நிலையில் முள்ளியவளைப் பொலிஸார் கேப்பாபிலவு மக்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நடந்த இந்த வழக்கு விசாரணையில், பொலிஸாரால் எதிர்தரப்பு வாதிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பிரதிநிதிகள் ஐவர் முன்னிலையாகி இருந்தனர். இவர்களின் சார்பில் சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், பரஞ்சோதி ஆகியோர் வாதிட்டனர்.

நீதிபதி தனது தீர்ப்பில் 'பொது 06▶

## புதிய பிரதேச உறுப்பினர்கள் கிராமங்களை முன்னேற்றுவர்


### முதலமைச்சரின் நம்பிக்கை இது!



வவுனியா, பெப். 13
பிரதேச சபைத் தேர்தல்களின் முடிவுகள் முழுமையாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாகத் பிரதேச சபை உறுப்பினர்களாகத் தெரிவானவர்கள் கிராமங்களின் அபிவிருத்தியில் மிக அக்கறையுடன் செயற்படுவர். அவர்கள் தங்கள் பிரதேசங்களை 06▶



# விடுதலைப் பயிரும் அறுவடையும்







● **சின்னப்பொடி**

தமிழில் "கிணற்றுத் தவளை மனோபாவம்" என்ற ஒரு சொற்றொடர் உள்ளது. இது நம்முடைய ஆய்வாளர்கள் சிலருக்கு இப்போது மிகவும் பொருத்தமான ஒன்றாக உள்ளது.

இவர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பௌத்த சிங்கள பேரினவாதியான மகிந்த அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உதவி விட்டார் என்றும் லண்டனில் பிரிகேடியர் பெர்னாண்டோவுக்கு எதிராகப் புலம் பெயர்ந்த தமிழர்கள் நடத்திய போராட்டம் மகிந்தவின் வெற்றிக்குத் தூண்டுகோலாக அமைந்து விட்டதென்றும் கூறுகின்றனர். இவர்கள் மகிந்தவும் அவருக்கு எதிரணியாக உள்ள மைத்திரி பால சிறிசேனவும் ரணிலும் பௌத்த சிங்கள பேரின வாதம் என்ற நாணயத்தின் 2 பக்கங்கள் என்பதை மறந்துவிட்டனர். அல்லது மறைக்க முயல்கின்றனர்.

மகிந்த 100 வீதம் சிங்கள பௌத்த இனவாதத்தின் பிரதிநிதி என்றால் மைத்திரி 99 வீதம் அந்தப் பேரின வாத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராக இருக்கிறார். இந்த இருவரை விட ஆபத்தானவர் ரணில். அவர் 200 வீதம் சிங்கள பௌத்த பேரினவாத நலன்களைப் பிரதிபலிப்பவர்.

மகிந்தவின் மீள் எழுச்சி என்பதை சிங்கள அதிகார வர்க்கத்துக்குள் இருக்கும் அக முரண்பாடுகளின் வெளிப்பாடாகவே நாம் பார்க்க வேண்டும். பௌத்த சிங்கள பேரினவாதம் மைத்திரி - ரணில் ஆட்சியில் அடங்கிப் போய்விடவில்லை என்பதை பிரிகேடியர் பெர்ணாண்டோ விடயத்தில் நாம் பார்க்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சறுக்கல் என்பது 1975 க்கு முன் பௌத்த சிங்கள பேரினவாதிகளின் ஒத்தோடிகளாக இருந்து தமிழ்மக்களின் உரிமைகளை தங்களது அதிகாரவர்க்க நலன்களுக்காக அவர்களிடம் விற்றுவிட்டு அல்லது விட்டுக்கொடுத்துவிட்டு தமிழர் தாயகத்தில் வந்து தமிழீழமே தீர்வு. அதுவே எமது உயிர் மூச்சு என்று பம்மாத்து விட்ட தமிழ் அதிகார வர்க்க அரசியலை மறுபடியும் துளிர்க்க வைக்க முயன்ற சம்பந்தன், சுமந்திரன், மாவைக் கும்பலுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை மணியாகவே பார்க்க வேண்டும்.

இன்னொருபக்கம் "புலம் பெயர்ந்த தமிழர்களே உங்களுடைய வேலையை நீங்கள் பார்த்துக்கொண்டிருங்கள். உங்களது செயற்பாட்டால் தாயக மக்களை நெருக்கடிக்குள் தள்ளாதீர்கள்" என்று இந்த ஆய்வாளர்கள் கீதோபதேசம் செய்கிறார்கள்.

இன்று அரசியல் என்பது சர்வதேச மயப்படுத்தப்பட்டு விட்டது. அதற்கு சிறிலங்காவும் விதி விலக்கல்ல. உலகில் யாரை ஆட்சிக்குக் கொண்டுவர வேண்டும் என்பதை உலகப் பெரு முதலாளித்துவ நிறுவனங்கள் மற்றும் உலக நிதி மேலாண்மை நிறுவனங்கள் தான் தீர்மானிக்கின்றன. இன்று சிறிலங்காவில் மகிந்தாவை மீள்எழுச்சி கொள்ள வைத்ததில் சீனாவின் பங்களிப்பு இருந்தது என்பதை நாம் மறுக்க முடியாது. சீனா, இந்தியா என்ற இரண்டு பிராந்திய மேலாதிக்க சக்திகளின் அதிகாரப் போட்டியில் மகிந்தவை சீனாவும், மைத்திரி மற்றும் ரணிலை இந்தியா மற்றும் அமெரிக்காவும் பயன்படுத்துவதை நாம் மறுதலிக்க முடியாது.

இந்த அதிகாரப் போட்டிக்குள் நாங்கள் சிறு துரும்புகளாகப் பலவீனமானவர்களாக வடக்கு -கிழக்கில் மட்டும் இருந்து கொண்டு எதையும் சாதித்துவிட முடியாது.

உலகில் தமிழர்களின் எண்ணிக்கை 92 மில்லியன். சிங்கள மக்களின் எண்ணிக்கை ஒன்றரை மில்லியன்.

இந்த ஒன்றரை மில்லியன் மக்களைத் தளம் கொண்டு இயங்கும் பௌத்த சிங்கள பேரினவாதத்திடம் நாம் ஏன் தோற்றுப் போகிறோம்? ஏன் கையேந்தி நிற்கிறோம் என்றால் நாம் அரசற்ற சமூகமாக இருப்பதே அதற்குக் காரணமாகும். ஏறக்குறைய 2000 மாம் ஆண்டு வரை மொழியால் இனத்தால் அரசியல் கருத்தால் உலகளவில் ஒன்றிணையத் தடைகள் இருந்தன.

ஆனால் இன்று உலக பெருமுதலாளித்துவம் தனது நலனுக்காக உருவாக்கிய உலகமயமாதல் என்ற நடைமுறை உலக மக்களை அரசியல் பொருளாதார கலாசார காரணங்களுக்காக ஒன்றிணைந்து உலகளவில் செயற்படக் கூடிய பாதையை நமக்குத் திறந்து விட்டிருக்கிறது.

இதை நாங்கள் பயன்படுத்தி சனநாயக முறையில் உலகளவில் விசுவரூபம் எடுத்து பௌத்த சிங்களத்தை தோற்கடிக்கப் போகிறோமா? அல்லது குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டு எம்.பி பதவிக்கும் மாகாண முதலமைச்சர் பதவிக்கும் எதிரியிடம் மண்டியிடும் கையேந்தி அரசியல் நடத்தப் போகிறோமா?

இன்று புலம் பெயர்ந்த தமிழர்களான எங்களிடம் 4 இலட்சம் நாற்றுக்கள் இருக்கின்றன. இந்த நாற்றுக்களைத் தமிழின விடுதலை என்ற வயலில் உரிய முறையில் நட்டுப் பயிர் செய்து அறுவடை செய்யப் போகிறோமா? அல்லது ஒவ்வொருவரும் தங்கள் வீட்டுத் தோட்டத்தில் நட்டுச் சிறு பலன்களைப் பெற்று அடையாளம் இழக்கப் போகிறோமா?



## வெற்றியா? தோல்வியா?

● **வைரவநாதன் சிவரதன்**

என்னைப் பொறுத்தவரை யாழ் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு படு தோல்வி வட்டார முறையில் நின்று வெற்றி பெற்ற தமிழ்த் தேசியப் பேரவை மற்றும் சுயேச்சை அணிகளுக்கு கிடைத்திருக்கும் வெற்றி மிக பெரிய வெற்றி. வெளிப்போக்காக நேர்க்கினால் எண்ணிக்கை அடிப்படையில் கூட்டமைப்பு கூடுதலான பிரதேச சபைகளைக் கைப்பற்றியிருக்கலாம்.

ஆனால் அவர்களுக்கு கிடைத்த வெற்றி வீதத்தோடு தமிழ்த் தேசியப் பேரவைக்குக் கிடைத்த வெற்றி வீதம் மிகப் பெரிது.

பூச்சியத்திலிருந்து 95 க்கு வருவதற்கும் 95 இல் இருந்து 98 க்குப் போவதற்கும் உள்ள வித்தியாசம் போன்றது. தமிழ்த் தேசியப் பேரவை பூச்சியத்திலிருந்து 95 க்கு வந்திருக்கிறது. இந்த மிகப் பெரிய பாய்ச்சல் அவர்களது வெற்றியே. கூட்டமைப்பு 98 இலிருந்து 95 க்கு போயிருக்கிறார்கள். மக்கள் முழுமையாக கூட்டமைப்பை ஆதரித்தால் தான் அது கூட்டமைப்பு.

இதுவரை தமிழ்த் தேசியம் என்ற அடிப்படை கருத்தை வைத்து வேறு எவரும் (கூட்டமைப்பைத் தவிர) இந்தளவு வெற்றியைப் பதிந்திருக்கவில்லை.

எனவே மக்களின் இந்த உணர்வுக்கு மதிப்பளித்து அவர்களது கருத்துக்களையும் உள் வாங்கிப் பயணிப்பதே கூட்டமைப்புக்கும் நல்லது. தமிழருக்கும் நல்லது முதல் முதல் விமர்சன அரசியலில் இருந்து செயற்படு அரசியலுக்குள் காலடி எடுத்து வைத்திருக்கிறார்கள் தமிழ்த் தேசியப் பேரவையினர்.

இனித் தான் தாங்கள் வைத்த விமர்சனங்களுக்கும் - செயற்படுத்துவதத்துக்கும் இடையிலான வித்தியாசங்களை அவர்கள் எதிர் நோக்குவார்கள். வீழ்வது நாங்களாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்.

எதிரொலி
Ethiroli
செவ்வாய். 13 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

# துருவங்கள் இணையுமா?

உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னும் கூட, தமிழர் பகுதிகளில் எந்தப் பிரதேச சபையில் எந்தக் கட்சி ஆட்சியமைக்கும் என்று தெரியாத சூழலே நீடிக்கிறது. அந்தளவுக்குப் பெரும்பாலான பிரதேச சபைகளில் குழப்பமே தொடர்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதிகளவான உள்ளூராட்சிசபைகளைக் கைப்பற்றினாலும் பெரும்பான்மைப் பலத்தைக் கைப்பற்றமுடியவில்லை. கூட்டமைப்பினை விடவும், ஏனைய கட்சிகள் பெற்ற ஆசனங்கள் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் அதிகமாகவே உள்ளன. எனவேதான் இத்தனை நாளும் கட்டிக் காத்த மேட்டுக்குடித்தன அரசியலைக் கைவிட்டு, எல்லாத் தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும் எனக் கூட்டமைப்பு கெஞ்சத் தொடங்கியுள்ளது.

அதிலும் ஒரே கொள்கையோடு பயணிக்கும் தமிழ்க் கட்சிகள், மக்களுக்காகவும், மகிந்தவின் எழுச்சியை எதிர்கொள்வதற்காகவும் ஒரே அணியாக மீற முன்வர வேண்டுமென கூட்டமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது. 'ஒரே கொள்கை' என்ற சொல்லைப் பயன்படுத்தியதால், இந்த அழைப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைக் குறிவைத்தே விடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. ஆயினும் இந்த அழைப்புக் குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சாதகமாகப் பரிசீலிப்பதாகக் கூறினாலும், முக்கியமான சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அதாவது கூட்டமைப்பின் தலைமையும், அதன் பங்காளிக் கட்சிகளின் தலைமைகளும் கூட்டமைப்பில் இருந்து விலகினால் மாத்திரமே கூட்டமைப்போடு இணைந்து செயற்படலாம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போட்ட போட்டில், கூட்டமைப்பின் ஆட்சிக்கனவு அப்படியே அந்தரத்தில் உறைந்துபோயுள்ளது. ஆயினும் ஈ.பி.டி.பியோடு கூட்டுச் சேர்ந்தாவது உள்ளூராட்சி சபைகளைப் பிடிக்க கூட்டமைப்பு இன்னொரு வழியாகவும் முயன்று கொண்டிருக்கிறது.

ஆனால், அப்படி உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றுவதற்காக, இப்போதைக்கு ஈ.பி.டி.பியோடு கூட்டமைப்பு கைகோர்த்தால், அத்தோடு அடுத்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறும் நினைப்பைக் கூட்டமைப்புக் கைவிட வேண்டியதுதான். ஏனெனில் இது நாள் வரை, புலிகளால் உருவாக்கப்பட்ட கட்சி, தலைவர் கைகாட்டிய கட்சி என்ற 'சென்ரிமென்ட்' விடயங்களை வைத்தே கூட்டமைப்பு மக்களை தன் வசப்படுத்தி வைத்திருக்கிறது.புலிகளின் அரசியல் விம்பமாகவே பெரும்பாலான தமிழ் மக்கள் கூட்டமைப்பை நோக்குகின்றனர். அப்படிப்பட்ட நிலையில், இன்னமும் 'பாசிசப் புலிகள்' என்றும் , சகோதரப் படுகொலை செய்தவர்கள் என்றும் அல்லும்பகலும் புலிகளைத் தூற்றிக் கொண்டிருக்கும், ஒரு முன்னாள் ஆயுதக் குழுவோடு, அதுவும் கடைசிவரை–மகிந்த ஆட்சியில் இருக்கும் வரை– அரச துணைக்குழுவாக இயங்கிய கட்சியோடு கூட்டமைப்புக் கைகோர்த்தால் தமிழ் மக்கள் கடைசி வரை மன்னிக்கவே மாட்டார்கள். ஏற்கனவே கூட்டமைப்பின் வாக்கு வங்கி ஆட்டம் கண்டு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எழுச்சி பெற்றுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் இப்படியான விபரீதமான முடிவை எடுத்து, இன்னும் அதலபாதாளத்தில் வீழும் முயற்சியைக் கூட்டமைப்பு எடுக்காது என்றே நம்பலாம்.

இந்த நிலையில், தமிழ்த் தேசிய முன்னணியும் நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளை விதிக்காமல், இரு தரப்பின் அடையாளங்களையும், தனித்துவத்தையும் பேணக்கூடியவாறும், மக்களின் நலனை முன்னிறுத்தியும், கூட்டு முடிவை எடுக்கக் கூடியதான பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி, கூட்டமைப்போடு இணைந்து ஆட்சி செய்ய முன்வர வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் கூட.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# இலங்கையில் நடப்பதை அமெரிக்கா வெளிப்படுத்துமா?

ஆங்கிலத்தில் – Taylor Dibbert
வழி மூலம் – The diplomat
மொழியாக்கம் - நித்தியபாரதி

பெப்ரவரி 4 அன்று இலங்கை தனது 70 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது. பெப்ரவரி 01 அன்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் 'அமெரிக்க-சிறிலங்கா உறவு கடந்த 70 ஆண்டுகளாகத் தொடரப்படுவதாகவும் இனி வருங்காலங்களில் இரு நாடுகளின் உறவையும் மேலும் மேம்படுத்துவதற்கான புதிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்' எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை இராணுவத்துடனான உறவை அமெரிக்கா மேலும் பலப்படுத்தவுள்ளதாகவும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

'இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ள புதிய நடவடிக்கைகளில், இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது அவற்றிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புதல் மற்றும் வேறு பல இணைச் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய திறன்களை இலங்கை இராணுவத்தினருக்கு கட்டியெழுப்புதலும் ஒன்றாகும்' என ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது இராணுவத்தினர் பல்வேறு மனித உரிமை மீறல் மற்றும் யுத்த மீறல்களையும் போருக்குப் பின்னான காலப்பகுதியிலும் பல்வேறு மீறல் சம்பவங்களை மேற்கொண்டதாக பரவலாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் அமெரிக்காவானது இலங்கையுடன் ஏற்படுத்தியுள்ள உறவானது மிகவும் ஆபத்தான தவறாகும்.

நான் முன்னர் வாதிட்டது போன்று, இலங்கைத் தீவிலுள்ள இராணுவத்துடன் அமெரிக்கா தனது உறவை மேலும் பலப்படுத்துவதற்கு முன்னர் இது தொடர்பாக மீளச்சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிக்கப்படுவதானது மிகவும் மோசமான எண்ணமாகும்.

ஏனெனில் இவ்வாறான செயற்பாடானது இலங்கையில் ஒருபோதும் பாதுகாப்புத் துறையில் சீர்திருத்தம் ஏற்படப் போவதில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. பாலியல் ரீதியான வன்முறைகள் மற்றும் தமிழ் மக்கள் மீதான சித்திரவதைகள் தற்போதும் தொடர்வது மிகப் பெரியதொரு பிரச்சினையாக உள்ளதாக அண்மையில் அசோசியேட்டட் பிரஸ் ஊடகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறான வன்முறைச் சம்பவங்களில் இலங்கை இராணுவத்தினரே ஈடுபடுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் அதிபராக வெற்றி பெற்றதானது பூகோள மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு ஒரு சவாலாக இருக்கும் எனக் கணிப்பிடப்பட்டது. இருப்பினும் மனித சுதந்திரம் மற்றும் பன்முகவாத விழுமியங்களின் முக்கியத்துவம் தொடர்பாக அமெரிக்க அதிகாரிகள் கடந்த ஒரு ஆண்டாக மீளவும் வலியுறுத்தி வருகின்றனர்.

ஜனவரி 2015ல் மைத்திரிபால சிறிசேன எதிர்பாராத வகையில் வெற்றி பெற்றபோது, இவர் நாட்டில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வருவார் என மக்கள் நம்பினர். சிறிசேன ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில், இவர் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துள்ளனர்.

இலங்கையில் சில சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் பெரியளவில் சீர்திருத்தங்கள் இடம் பெறவில்லை. ஆகவே புதிய சிறிலங்கா அரசாங்கமானது கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட மீறல்களையும் கருத்திற் கொள்ள வேண்டும் என்பதை அமெரிக்க அதிகாரிகள் நினைவுபடுத்த வேண்டும். ஆகவே சிறிலங்காவிற்குள்ளே உண்மையில் என்ன நடக்கின்றது என்பதை அமெரிக்க அதிகாரிகள் வெளிக்கொண்டு வர வேண்டும்.

# காற்றுள்ளபோது தூற்றிய அமைச்சர்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் படுதோல்வியடைந்து துவண்டு போயிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொஞ்சம் ஆறுதல் கிடைத்துள்ளது என்றால் அது கிழக்கில் அவருக்கு கிடைத்த தேர்தல் முடிவுகள்தான்.

கிழக்கில் பல இடங்களில் மஹிந்தவின் கட்சி காணாமல் போய் சுதந்திரக் கட்சி நல்ல பெறுபேறுகளை அடைந்துள்ளது. அதிலும் காத்தான்குடி முழுமையான திருப்தியை அவருக்குக் கொடுத்துள்ளது. காத்தான்குடி நகர சபைக்கு இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாவின் தலைமையில் போட்டியிட்ட சுதந்திரக் கட்சி எதிர்பார்த்ததை விட அபார வெற்றியைப் பெற்றது.

காத்தான்குடியில் மொத்தமாக உள்ள பத்து வட்டாரங்களையும் சுதந்திரக் கட்சி கைப்பற்றியது.இப்படியோர் அபார வெற்றியை சுதந்திரக் கட்சி ஜனாதிபதியின் சொந்த ஊரான பொலனறுவையில்கூட பெறவில்லை.இதனால் மைத்திரிக்கு பெரும் மகிழ்ச்சி. ஆனால்,ஹிஸ்புல்லாவோ காற்றுள்ளோபோதே தூற்ற வேண்டும் என்பதுபோல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார்.

தேர்தல் முடிந்து மறுநாள் ஜனாதிபதி பாசிக்குடாவில் தங்கி இருந்தார். காத்தான்குடியில் தேர்தல் வெற்றியை ஹிஸ்புல்லா வாக்குகள் எண்ணப்பட்ட அன்றைய இரவே ஜனாதிபதிக்கு அறிவித்தார். மகிழ்ச்சியடைந்த ஜனாதிபதி மறுநாள் தன்னை வந்து சந்திக்குமாறு கூறினார். மறுநாள் சென்றுஜனாதிபதியின்பாராட்டைப்பெற்றுக்கொண்டார்.

அந்த மகிழ்ச்சியான தருணத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியிடம் ஒரு சின்ன வேண்டுகோளை போட்டார். "சேர்! நாடுபூராகவும் சுதந்திரக் கட்சி வீழ்ச்சியடைந்திருக்கும் நிலையில் இப்படியொரு மாபெரும் வெற்றியைத் தந்த காத்தான்குடி மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டும்" என்கிறார்.

'என்ன செய்யணும்னு சொல்லுங்க" என்று கேட்டார் ஜனாதிபதி."நான் இப்போது இராஜாங்க அமைச்சராக இருக்கின்றேன். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சொன்றைத் தந்தால் நல்லா இருக்கும். அதைக் கொண்டு மக்களுக்கு அதிக சேவை செய்ய முடியும்". -என்றார்.

ஜனாதிபதியும் பச்சைக் கொடி காட்டி அனுப்பி வைத்தாராம். விரைவில் இடம்பெறவிருக்கும் அமைச்சரவை மாற்றத்தின் போது ஹிஸ்புல்லா எதிர்பார்க்கும் அந்தப் பதவி கிடைக்கும் என்று நம்பப்படுகின்றது.




# க.பொ.த. சாதாரண தர பெறுபேறுகள் மார்ச்சில்

கொழும்பு, பெப். 13

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் வரும் மார்ச் மாதம் வெளியாகும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், எதிர்வரும் டிசெம்பர் மாதம் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்க ஆட்பதிவுத் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. என்றும் அவர் சொன்னார். (ச)




## இன்று நாளும் கோளும்

13.02.2018 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 01 ஆம் நாள்

திரயோதசி பி.ப. 03.00 மணி வரை | உத்தரம் 06.19 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 03.00 - 04.30 | சுபநேரம் மு.ப. 07.30 - 08.30 | எமகண்டம் மு.ப. 09.00 - 10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பரிவு | தனம் | தேர்ச்சி | செலவு | ஓய்வு | சினம் | நட்டம் | மறதி | ஆதரவு | பக்தி | கவனம் | உயர்வு |

# தலைமைகள் மீதான நம்பிக்கையீனமே இழுபறி முடிவுகளுக்குக் காரணமாகும்




"இதுவரை காலமும் தமிழ் மக்கள் நம்பியிருந்த தமிழ்த் தலைமைகள் மீதான நம்பிக்கையீனமும் தற்போது நம்பியிருக்கும் தலைமையின் மௌனமுமே உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளில் இவ்வாறு இரண்டும் கெட்டான நிலைக்கு காரணமாகும். இதன் காரணமாகப் பெரும்பாலான சபைகளில் ஆட்சியமைப்பதில் பெரும் இழுபறி நிலையேற்பட்டுள்ளது உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களாக மக்களால் வெற்றிபெறச் செய்யப்பட்டவர்கள் ஊழலற்ற நேர்மையான சேவையை எமது மக்களுக்கு வழங்க முன்வரவேண்டும்" என வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் வலியுறுத்தியுள்ளார்.

"இலங்கை தேர்தல் வரலாற்றில் தமிழர்களின் வகிபாகமானது ஆட்சி-அதிகாரங்களை நோக்கியதாக இருந்ததில்லை என்பதுடன் எமது இனத்தின் உரிமை சார்ந்தே இருந்து வந்துள்ளது என்பதனை மீண்டுமொரு தடவை இடித்துரைப்பதாக இந்தத் தேர்தல் முடிவுகளும் அமைந்துள்ளன.

இந்தப் பின்னணியில், வடக்கு கிழக்கில் உள்ள சபைகளில் தனித்து ஆட்சியமைக்கும் வகையிலான பெரும்பான்மை பலம் எந்தவொரு தமிழ்க் கட்சிகளுக்கும் கிடைக்காத திரிசங்கு நிலையைத் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளன.

இதுவரை காலமும் தமிழ் மக்கள் நம்பியிருந்த தமிழ்த் தலைமைகள் மீதான நம்பிக்கையீனமும் தற்போது நம்பியிருக்கும் தலைமையின் மௌனமுமே இவ்வாறு இரண்டும் கெட்டான நிலைக்குக் காரணமாகும். இதன் காரணமாகப் பெரும்பாலான சபைகளில் ஆட்சியமைப்பதில் பெரும் இழுபறி நிலையேற்பட்டுள்ளது. இது தான் யதார்த்தபூர்வமான உண்மையாகும். அதைவிடுத்து வேறு அர்த்தப்படுத்தல்களை முன்னிறுத்தி காலத்தை வீணடிக்காது மக்கள் நலனை முன்னிறுத்தியதான முடிவுகளை சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து எடுக்க வேண்டும்.

எது எப்படி இருந்தாலும் வாக்களித்த மக்கள் அனைவரும் தமிழர்களே. அவர்களை முறையாக வழிநடத்தி நேர்வழியில் ஒன்றிணைக்காமை தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களின் தவறாகும். ஆகவே, மாற்றுத் தலைமையை ஏற்றுக்கொண்டவர்கள், ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்ற கண்ணோட்டத்தில் மக்களைப் பழிவாங்கும் விதமாக செயற்படாது பக்கசார்பற்று சேவையாற்ற அனைவரும் முன்வர வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களினூடான அபிவிருத்திப் பணிகளை செவ்வனே செய்து எமது தேசத்தின் அடிப்படைக் கட்டுமானத்தை மேம்படுத்தும் விதத்தில் கட்சி, அரசியல் வேறுபாடுகள் கடந்து கொள்கை வழி நின்று அனைவரும் சேவையாற்றுவதே வாக்களித்த எமது மக்களுக்கு நாம் செய்யும்கைமாறாகும்.

இவ்வேளையில், பெரும் அரசியல் குழப்ப நிலைக்கு வித்திடுவதாக தென்னிலங்கை தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன. அதன் அடிப்படையில், இலங்கை அரசபடைகளால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக் குற்றங்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இலங்கை இராணுவத்தினரால் வல்வளைப்பு செய்யப்பட்டிருக்கும் நிலங்களின் விடுவிப்பு போன்ற விடயங்களுக்கான பொறுப்புக் கூறல் கடப்பாட்டில் இருந்து தம்மை விடுவிக்கும் முனைப்பில் இந்த நல்லாட்சி அரசு கவனம் செலுத்தும் அபாயம் உள்ளது.

இதனை முறியடித்து தமிழர்களுக்கு உரிய நீதியை பெற்றுக்கொள்வதற்கும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கியதான நிரந்தரத் தீர்வை அடைய வேண்டுமாயின் தமிழர் தரப்பின் ஒற்றுமை அவசியமாகும்.

தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமனானது என்ற அடிப்படையில் எமக்கான நீதி, பிராந்திய உலக வல்லாதிக்க நாடுகளின் அரசியல், பொருளாதார நலன்களின் அடிப்படையில் தொடர்ந்தும் தாமதிக்கப்பட்டு மறுக்கப்படும் ஏதுநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டே ஆகவேண்டியது காலத்தின் கட்டாயமாகுமென்பதனை தமிழ்மக்கள் தமது தீர்ப்பின்மூலம் வலியுறுத்தியுள்ளனர்"எனவும் அமைச்சர் அனந்தி சசிதரன் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# கூட்டமைப்போடு கூட்டில்லை

## ஜனநாயகத் தமிழரசுக் கட்சி அறிவிப்பு

மன்னார், பெப்.13



"எவ்விதக் கொள்கையும் இல்லாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்க எமது கட்சி ஆதரவு வழங்காது. ஆனால் கொள்கையுடனும் கோட்பாட்டுடனும் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட புதிய அரசியலமைப்பு முன் வரைவுக்கு, கொழும்பு அரசியலுக்கு இணங்காத நிலைப்பாட்டுக்கும், புதிய அரசியல் அமைப்பிலே உள்ளிடப்பட வேண்டிய விடயங்களை வெளிப்படையாக பகிர்ந்து பேசக்கூடிய வாதத்துக்கும் வந்து தலைமை நீக்கத்துக்கும் உட்படுவார்களானால் எங்கள் ஆதரவு கிடைக்கும்" என ஜனநாயக தமிழரசு கட்சி செயலாளர் வீ.எஸ். சிவகரன் தெரிவித்தார்.

"நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எங்களுடைய கட்சிக்கு வாக்களித்த மன்னார் மாவட்ட வாக்காளராகிய எங்கள் மக்களுக்கு மிகுந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் எங்கள் மீதான கரிபூசல்கள், எங்கள் கட்சி மீதான பல்வேறான விமர்சனங்கள் மாறுபட்ட கருத்தியல்கள் குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் எங்கள் மீது சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டும் கூட நாங்கள் ஒரு மாற்று சக்தியாக ஒரு மாதத்துக்குள் தொடங்கப்பட்ட கூட்டினால் இத் தேர்தலில் கணிசமான வாக்குகளையும் அங்கத்தவர்களையும் பெற்றிருக்கின்றோம் என்றுதான் கூற வேண்டும்.

அரசியலில் மாற்றுக் கட்சி ஒன்று தேவை என்பதைத் தமிழ் மக்களுக்கு இந்தத் தேர்தல் நிரூபித்துள்ளது. ஆகவே இந்தத் தேர்தல் மூலம் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது . தமிழ்த்-தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு கிழக்கு பகுதியில் 40 வீதத்துக்கு குறைவான வாக்குகளே அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் எப்பொழுதும் கொள்கை சார்ந்து செயற்படக் கூடியவர்கள்,அந்தக் கொள்கைகளைச் செயலாற்ற முடியாதவர்கள், கொழும்போடு இணக்க அரசியல் நடத்துபவர்கள், அரசாங்கத்தோடு கொள்கையை விட்டு இணங்கிப் போகின்றவர்களுக்கு மக்கள் இப்பொழுது தகுந்த பாடத்தை வழங்கி இருக்கின்றார்கள்.

குறிப்பாக யாழ் மண்ணில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிக மோசமான பின்னடைவும் ,வடக்கிலே ஒரு உள்ளூராட்சி மன்றத்தை தவிர ஏனைய அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் பெரும்பான்மையை பெற முடியாத இக்கட்டான சூழ்நிலையும் எற்பட்டுள்ளது.

இனியாவது இவர்கள் சிந்தித்து ஒற்றுமையாக ,நேர்மையாக,கொழும்போடு இணக்க அரசியல் இல்லாமல் எமது மக்களின் உணர்வுசார் நிலைப்பாடுகளைப் புரிந்து கொண்டு மக்களின் கருத்தியல்பு சிந்தனைகளோடு சமஷ்டி அடிப்படையிலான எங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய வழிவகைகளோடு கொண்டு போகக்கூடிய நிலைப்பாடும் சம்பந்தன், சுமந்திரன் தங்கள் கருத்தியல்புகளை விட்டு அல்லது இந்தத் தோல்வியை ஏற்றுக்கொண்டு சம்பந்தனும் சுமந்திரனும் தமிழ் மக்களால் அரசியலிலிருந்து அகற்றப்பட அல்லது தாங்களாகவே இதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.


தமிழ் மக்கள் தகுந்த தீர்வை வழங்கியிருக்கின்றார்கள். ஆகவே இதிலிருந்து இவர்கள் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்களுடைய கூட்டும் தொடரும். முயற்சியும் தொடரும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இரண்டு உள்ளூராட்சி மன்றங்களை ஐக்கிய தேசியக் கட்சியிடம் இழந்து விட்டனர். மாந்தை மேற்கு, மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை ஆகியவற்றில் தனித்து ஆட்சி புரியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

ஆகவே இனியாவது இவர்கள் சிந்திக்க வேண்டும். மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்கள் கட்சி இதுவரைக்கும் யாருக்காவது ஆதரவு வழங்குவதென்று இன்னும் தீர்மானிக்கவில்லை. நாங்கள் ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டிலும் இல்லை. தனித்து சுயாதீனமாகவே எங்கள் அங்கத்தவர்கள் சபைகளில் இயங்குவார்கள்" என்று அவர் தெரிவித்துள்ளார். (அ)

# மனோ கணேசனுக்கு 10 ஆசனங்கள்



கொழும்பு, பெப்.13

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட மனோ கணேசன் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, 10 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

பெப்ரவரி 10 ஆம் திகதி நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான மனோ கணேசன் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஏணிச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட்டிருந்தது.

இந்தத் தேர்தலில், அந்தக் கட்சிக்கு 27,168 வாக்குகள் கிடைத்ததன் மூலம், 10 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

எனினும், 110 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகர சபையில், ஐதேக 60 ஆசனங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

23 ஆசனங்களுடன், சிறிலங்கா பொதுஜன முன்னணி இரண்டாவது இடத்திலும், 12 ஆசனங்களுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மூன்றாவது இடத்திலும் உள்ளன.

10 ஆசனங்களுடன் ஐக்கிய முற்போக்கு கூட்டணி நான்காமிடத்திலும், 6 ஆசனங்களுடன் ஜேவிபி ஐந்தாமிடத்திலும் இருக்கின்றன. (அ)

# குறுகிய காலத்தில் பேராதரவு!



## சந்திரகுமார் அறிக்கை

"மக்களுக்கான வெற்றி"என மாற்றத்தை விரும்பிய மக்கள் எமக்குப் பெரும் ஆதரவை வழங்கி இருக்கிறார்கள். மக்களுடைய இந்த ஆதரவின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேசசபைகளிலும் 19 உறுப்பினர்களுக்கான இடங்கள் கிடைத்துள்ளன. இதற்கான ஆதரவை வழங்கிய அனைத்துத் தரப்பினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்" என்று சமத்துவம் சமூகநீதிக்கான மக்கள் அமைப்பு முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,


"கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகளிலும் வலுவான ஒரு எதிர்த்தரப்பாக நாமே செயற்படவுள்ளோம். எதிர்த்தரப்பு என்பதற்காக எல்லாவற்றுக்கும் எதிராகச் செயற்படாமல் மக்களினுடைய எதிர்பார்ப்புக்கு அமைய ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாத்து சிறப்பான நிர்வாகம் ஒன்றை வழிப்படுத்துவதற்கு முயற்சிப்போம். ஆதரவளித்த மக்களுடைய எதிர்பார்ப்புக்களை எம்மால் இயன்ற வரை நிறைவேற்றுவோம் என உறுதியளிக்கிறோம்.

மிகக்குறுகிய காலத்தில் மக்களிடையே பேராதரவைப் பெற்றிருக்கின்றோம். இது எம்மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையின் அடையாளம் ஆகும். இந்த நம்பிக்கையைப் பாதுகாத்து மேலும் எமது பணிகளைத் தொடர்வோம். மக்களுடைய இந்த ஆதரவு எதிர்காலத்தில் மேலும் எம்மைச் சிறப்பாக மக்கள் பணியாற்றுவதற்கான ஊக்கத்தைத் தருகிறது. ஆனாலும் தமிழ்மக்களுடைய அரசியல் தலை விதியை சரியான திசையில் கொண்டுசெல்ல வேண்டும் என்ற தமது விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக் கிட்டாமல் போன மக்களின் ஆதங்கத்தை நாம் உணர்ந்து கொள்கிறோம். எதிர்காலத்தில் நிச்சயமாக மக்களோடு இணைந்து மக்கள் விரும்பும் அரசியல் மாற்றத்தையும், தமிழ் மக்களின் விடுதலையையும் சாத்தியப்படுத்துவோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## கடைகளுக்கு விடுமுறை

வடமராட்சி, பெப்.13

சிவராத்திரி தினத்தின் மறுநாளான நாளை புதன்கிழமை நெல்லியடி வர்த்தக சங்கத்துக்குட்பட்ட கடைகள் அனைத்துக்கும் பொது விடுமுறை நாளாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நெல்லியடி வர்த்தக சங்கச் செயலாளர் சுரேரஞ்சன் அறிவித்துள்ளார். (அ-11)



## மட்டக்களப்பில் குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு, பெப்.13

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவு புதிய காத்தான்குடி -6 இல் உள்ள நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமை அலுவலகத்தின் மீது, நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேரக் கணிப்புக் குண்டு மூலமே, இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு குற்றத்தடயவியல் பிரிவு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குண்டுவெடிப்பில் அலுவலகத்துக்கு சிறிதளவான சேதமும் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற க்ட்சி அலுவலகத்துக்குச் சென்ற காத்தான்குடி பொலிஸார், விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர், மட்டக்களப்பு குற்றத் தடயவியல் பிரிவினர் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி கட்சி அலுவலகத்தில் வெடிக்காத நிலையிலும் சில நேரக் கணிப்புக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

வெடிக்காத நிலையில் மீட்கப்பட்ட ஏனைய 9 குண்டுகளும் வெடித்திருந்தால் அப்பகுதியில் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## ஊடகங்களே காரணம்

### பொலிஸ் புகழாரம்

யாழ்ப்பாணம், பெப்.13

கடந்த 10ஆம் திகதி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மிகவும் சுமூகமாக நடைபெற்று முடிவதற்கு ஊடகங்களின் ஒத்துழைப்பே காரணம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர குறிப்பிட்டார்.

எனவே பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து ஊடகங்களுக்கும் நன்றியைத் தெரிவித்த அவர், இனிவரும் காலங்களிலும் இவ்வாறு சுமூகமான முறையில் நாட்டின் சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஊடகங்களின் பங்களிப்பு தமக்குத் தேவை என்றும் வலியுறுத்தினார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

## திருப்பாடுகளின் நாடக பிரதி வழங்கல் நாளை

யாழ்ப்பாணம், பெப்.13

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு, திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி தியான' இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறைகள், தலைவர், பேராசிரியர் அருள்திரு ஞானமுத்து பிலேந்திரன் அடிகள் கலந்துகொண்டு இந்த ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட்பட ஏனைய துறை சார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளை வழங்கவுள்ளார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும் இம்முறை புதிதாக இணைந்து பங்குபற்ற விருப்பமுடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு மாலை 6.45 மணிக்கு 'வெள்ளியில் ஞாயிறு' என்னும் பெயரில் யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. 'வெள்ளியில் ஞாயிறு' திருப்பாடுகளின் நாடகம் இறுதியாக 2010ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



## வெள்ளைத் துண்டு விரிச்சுப்போட்டு இருக்கிறது நல்லதாம்

இண்டைக்கு காலமை கன நாளைக்குப் பிறகு பேப்பர் கடைக்குப் போனனான். எல்லாரும் எலக்சனைப் பற்றின கதை தான். ஆனால் எல்லாற்றை அபிப்பிராயமும் என்னெண்டால் இந்த எலக்சன் தேர்தல் அரசியல்வாதியளுக்கு நல்லபாடம் படிப்பிச்சிருக்கு எண்டதுதான். அதுவும் ரணில், மைத்திரி, சம்பந்தன் இவைதான் கூடின பாடத்தைப் படிச்சிருக்கினமாம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உடனை செய்ய வேண்டியது ஆரை வைச்சிருக்கிறது? ஆரை விலத்திறது எண்ட விசியத்தைச் செய்ய வேணும். அது தொடர்பா உடனடியாச் சிந்திக்க வேணும். சுமந்திரனை எப்பிடிக் கட்சீக்கை வைச்சிருக்கிறதெண்ட விசியத்தைக் கவனமெடாட்டி அடுத்த எலக்சனிலையும் கூட்டமைப்பு இன்னுமொரு விசேச பாடத்தைப் படிக்கும் எண்டும் ஆக்கள் கதைக்கினம்.

இந்த எலக்சனோடை புத்தி வராட்டி அரசியல் வாதியளுக்கு அதுகும் தேர்தல் அரசியல்வாதியளுக்கு இனிமேலும் புத்தி வராதாம் – எண்டு ஆக்கள் கதைச்சவை. உண்மைதான். மகிந்தாக்குக் கிடைச்ச வாக்குச் சொல்லாமல் சொல்லுது "அரசியல் யாப்புத் திருத்தச் சட்டம் வேண்டாம்" எண்டு. ஏனெண்டால் அதைக் கதைச்சுத்தானே மகிந்தா பிரச்சாரம் செய்தவர். தமிழருக்கு நாட்டை மைத்திரி எழுதிக் குடுக்கப்போறார் கவனம் எண்டும் சொன்னவராம். அப்ப இன்னும் இனவாத அரசியல் தான் தெற்கிலை நடக்கிது. அப்ப ஏன் நாங்கள் பூனை பால் குடிக்கிற மாதிரி எங்கடை கண்ணை நாங்களே மூடிக்கொண்டு "நல்லிணக்கப் பால்" குடிக்க வெளிக்கிடுறம். சரிவராத ஒண்டை வைச்சு ஏன் சும்மா வெறு வாய் சப்பிறம்? எங்களை நாங்களே ஏமாத்திற மாதிரி எல்லே? அடுத்தது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குச் சார்பா விழுந்த வேட்டு என்னத்தைச் சொல்லுது? சைக்கிளுக்கு விழுந்த வோட்டு என்னத்தைச் சொல்லுது? வட மாகாணத்திலை மகிந்தாவுக்கும், மைத்திரிக்கும், ரணிலுக்கும் விழுந்த வோட்டுகள் என்னத்தைச் சொல்லுது? – எண்டு முதலி தான் என்னட்டைக் கேட்டு என்ரை அரசியல் அறிவுக் கண்ணைத் துறந்தவன். அவன் கேக்கிறதிலையும் நியாயம் கிடக்கெல்லே?

ஒற்றுமையைப் பற்றித் தானே தொண்டை கிழியக் கத்தினம் எங்கடை ஆக்கள். "அறுவது வருசமாப் பொறுத்த நீங்கள், இன்னும் ஒரு இரண்டு வருசம் பொறுங்கோவன் உங்களுக்குச் சொர்க்கத்தைக் காட்டிறம்" எண்டு சம்பந்தர் சொல்லச் சுமந்திரன் பிற்பாட்டுப் பாடினவரெல்லே? இன்னும் சுதி கூட்டிப் பாடிக் கொண்டுதானே இருக்கினம். இத்தினை லட்சம் சிங்களச் சனம் நெஞ்சுக்கை நஞ்சை வைச்சுக் கொண்டிருக்கேக்கை நல்லிணக்கமும், சமாதானமும், சந்தோஷமான எக்க இராஜ்ஜியமும் என்னெண்டு சரிவரும்? ஏன் இந்த முறை குமார் பொன்னம்பலத்தின்ரை மேனுக்குக் கூடப் போட்டவை. டக்கருக்கு ஏன் கூட விழுந்தது. நெடுந்தீவு அவற்றை கையிலை. டக்கருக்குச் சனம் விசரிலை போடேல்லை. அவர் அரசாங்கத்தோடை இருந்தாலும் பின் கதவாலை அவையிட்டைப் போகேல்லை. எல்லாரும் அறியப் பப்பிளிக்காப் போய் வாங்கிறதை வாங்கிச் சனத்துக்குச் சாப்பிட வழி ஏற்படுத்திக் குடுத்திருக்கிறதா ஒரு கடைக்காரன் சொன்னவர். "ஒரு கட்டத்திலை டக்கர் இல்லாட்டித் தங்கடை குடும்பமே இல்லை" எண்டு அந்த மனுசன் சொல்லேக்கை அவற்றை கண்ணிலை கண்ணீர் வந்திது. அப்பிடி கூட்டமைப்பைப் பற்றி ஆரும் சொல்லிக் கவலைப்பட்டதா நான் கேள்விப் படேல்லை. அவை இருந்த படியாலை நாங்கள் தப்பினனாங்கள் எண்டு ஒரு தரும் ஆன்மாத்தமாச் சொல்லேல்லை. ஏன்? அவை அப்பிடி ஒண்டும் செய்யேல்லை எண்டு தெரியேல்லை.

முள்ளிவாய்க்காலிலை இருந்து வந்த சனத்தைக் கரப்புக்கை கோழிக்குஞ்சை வைச்சமாதிரி அடைச்சு வைச்சிருக்கேக்கை, கூட்டமைப்பு என்னத்தைச் செய்தது? எண்டு பேப்பர் கடைக்கு வாற பரமசிவம் கேட்ட கேள்விக்கு என்னட்டைப் பதில் இல்லை. என்னத்தைச் சொல்லலாம்? ஏனெண்டால் தமிழருக்கு எண்டு இருந்த கட்சி அது ஒண்டுதானே? அவைக்குத்தானே அந்தப் பொறுப்பு இருந்தது. அவை அப்ப களத்திலை இறங்கேல்லை. பிறகு சனத்துக்கு முன்னாலை போய் "தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் தேசிய தலைவர்தான் ஒரு அரசியல் நோக்கத்தோடை துவக்கினவர். அதை உடைக்கக் குடாது" எண்டினம். பிறகு கஜேந்திரகுமாரை மெல்லக் கழட்டிவிட்டிட்டு, இப்ப கொஞ்சக் காலமாத் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் பிரபாகரனுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை எண்ணினம். அப்ப உதென்ன கதை? அது உண்மையோ?

இப்பதன்னும் நாள் செல்லேல்லை. வாயைத் துறந்து வடிவா உண்மையைச் சொல்லலாம். கட்சியை விட்டுக் கலைக்கிறதைக் கலைக்கலாம், களை எடுக்கலாம். உண்மையாத் தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய வேணும் எண்ட சிந்தனை நெஞ்சிலை வரவேணும். இல்லாட்டி யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டிலை வெள்ளைத் துண்டொண்டை விரிச்சிப்போட்டு இருக்கிறது திறம். பின்னேரத்திலை கொஞ்சச் சில்லறையாவது சுவறும். அதுக்குத்தான் இப்ப தட்டுப்பாடு– எண்டு அந்தாள் பரமசிவம் புறுபுறுத்தவர்.

- வில்லங்கம் விநாசி

# தொண்டராசிரியர்களுக்கான நியமனத் திகதியில் மாற்றம்

கொழும்பு, பெப். 13

வட, கிழக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி வழங்கப்படவிருந்த நியமனங்கள் பிற்போடப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் முன்பாக வட, கிழக்கு தொண்டர் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமைச்சர் இராதகிருஷ்ணன்:

'வட, கிழக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி அன்று கல்வி அமைச்சின் ஊடாக நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது ஆனால் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நியமனம் பிற்போடப்பட்டள்ளது.

காரணம் நியமனத்தில் ஒரு சிலரின் தகவல்கள் முறையாக இல்லாமையே. அவர்களின் பெயர்கள் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக பலரும் கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர். அதனை தொடர்ந்தே இந்த நியமனம் பிற்போடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ளது. அதற்கு பிரதமரும் அனுமதி வழங்கியுள்ளார். எனவே எதிர்வரும் அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்பு அனைவருக்கும் அதனை வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது - என்றார். (ச)

## இன்றைய கேலிச்சித்திரம்








சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் ஒட்டப்பட்ட தேர்தல் சுவரொட்டிகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம்...

# தடையை நீக்கியது நீதிமன்று வெளிநாடு பறக்கிறார் நாமல்



கொழும்பு, பெப். 13

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வெளிநாடு செல்ல கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்று நேற்று அனுமதி வழங்கியது.

இம்மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 18 ஆம் திகதி வரை வெளிநாட்டில் தங்கியிருக்க அவர் நீதிமன்றிடம் அனுமதி கோரியிருந்தார். அவரின் கோரிக்கைப் பிரகாரம் நீதிமன்றப் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள நாமல் ராஜபக்ஷவின் கடவுச் சீட்டுகளை ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஐ.நா. சபையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத் தொடர் மற்றும் இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்ளவே வெளிநாடு செல்கிறேன் என அவர் மன்றில் தெரிவித்திருந்தார்.

உதைபந்தாட்ட விளையாட்டை ஊக்குவிக்க கிரிஷ் லங்கா என்ற இந்திய நிறுவனம் வழங்கிய 7 கோடி ரூபாவை தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நாமல் ராஜபக்ஷ வெளிநாடு செல்ல நீதின்று தடை விதித்தது குறிப்பிடத்தக்கது. (ச)

# தொடர்ச்சிகள்

## இணைந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் மிக நீண்ட காலத்தின் பின்னர் ஒரே நாளில் வன்முறைகள் அற்ற நிலையில் மிக அமைதியாக நடைபெற்று முடிந்துள்ளது. தொகுதி வாரித் தேர்தல் முறை 49 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒழிக்கப்பட்டு விகிதாசார கலப்பு முறைத் தேர்தல் நடைமுறைகளின்படி வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் முடிவுகள் ஒரு சில இடங்களைத் தவிர கட்சிகள் இணையவேண்டும் என்ற தேவையையே சுட்டிகாட்டி நிற்கின்றன. இதுவே இன்றைய காலத்தின் தேவையுமாகும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற ஆன்றோர் வாக்குக்கு ஒப்ப தமிழ் மக்களின் இன்றைய நிலை - அவர்களின் அவசிய தேவைகள் - முன்னுரிமைகள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு எல்லா வேறுபாடுகளையும் மறந்து தமிழர்கள் என்ற ரீதியில் இணைந்து செயலாற்றுங்கள் என சம்பந்தப்பட்ட அனைவரிடமும் தமிழ் மக்கள் பெயரால்,வேண்டி நிற்கிறோம்-என்றுள்ளது. (ச)

## ஒன்றிணைந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான சந்திப்பு திருகோணமலையில் உள்ள அவரின் வீட்டில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

'முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வெற்றி எந்த விதத்திலும் கூட்டு அரசாங்கத்தைப் பாதிக்காது. எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியம்" என்றார். (ச)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் சிலரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் தாவவுள்ளனர்.

எனினும் பெரும்பான்மை பெற்றதும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து தனது பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சி உரிமை கோருவார். அவர் விரும்பினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அவர் பக்கம் இருக்கும் உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் நேற்றிரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சந்தித்து சுமார் இருமணிநேரம் பேச்சு நடத்தியிருந்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு சாதகமாக விரைவில் பதவி விலகும் பொருட்டே இச்சந்திப்பு இடம்பெற்றதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன. (ச)

## நாடாளுமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருந் தோல்வியைச் சந்தித்துள்ளன.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் மக்களின் நாடித்துடிப்பைப் பார்க்கும் களமாக உள்ளது. 2015 இல் உத்தியோகபூர்வமற்ற முறையில் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத்தை ஏற்க மக்கள் தயாரில்லை. இந்த அரசின் கொள்கைகளையும் மக்கள் நிராகரித்து விட்டனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடிய படையினரைப் பழிவாங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது அதன் தோல்விகளுக்கான காரணங்களில் ஒன்று. புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு மக்கள் தெளிவான அழைப்பை விடுத்துள்ளனர்" - என்றார். (ச)

## புதிய பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வர்."

இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்று வவுனியா இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசியபோதே அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்களை சந்திக்கவும், உரையாடவும், அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து செயலாற்றவும் விருப்பம் உள்ளபோதும் சில நேரங்களில் அது தனது சக்திக்கு அப்பாற்பட்டு விடுகிறது என்றும் அவர் கூறினார்.

போரின் பின் நாம் தமிழரெனத் தலை நிமிர்ந்து வாழும் காலம் உருவாகியுள்ளது. எமது விளையாட்டு வீர, வீராங்கனைகள் நாட்டின் விளையாட்டு அணிகளில் சேர்க்கப்பட்டு தமது சிறப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள் - என்றும் அவர் மேலும் சொன்னார். (ச)

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா சென்றிருந்த அவர், நேற்றுக் காலை 8.10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ஷ பெரு வெற்றியைப் பதிவு செய்ததைத் தொடர்ந்தே கோத்தபாய நாடு திரும்பியுள்ளார்.

இதேவேளை, அவன்கார்ட் ஆயுதக் கப்பல் மற்றும் நிதி மோசடி வழக்கிலிருந்து தம்மை விடுவிக்குமாறு கோத்தபாய கடந்த 2 ஆம் திகதி கேட்டிருந்தார். ஆனால் இதற்கு கொழும்பு மேல் நீதிமன்று மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

25 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துள்ளது கொழும்பு மேல் நீதிமன்றம்.

இரகசியப் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காகவே அவருக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பில் வாஸ் குணவர்த்தனவை இரகசியப் பொலிஸார் கைது செய்யச் சென்ற போதே ஓர் அதிகாரிக்கு அவர் மிரட்டல் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## தொடர்ந்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடாது மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபடலாம்" என அறிவுறுத்தினார். (ச)




# சட்டசபையில் 'ஜெ'

சென்னை, பெப். 13

எதிர்க்கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் தமிழக சட்டசபையில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் படம் திறக்கப்பட்டது.

தமிழகத்தின் முதலமைச்சராக 6 தடவைகள் பொறுப்பு வகித்த ஜெயலலிதா, 2016ஆம் ஆண்டு மரணமடைந்தார். அவரது உடல் மெரினா கடற்கரையில் எம்.ஜி.ஆர். நினைவிடம் அருகே அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் ரூ.43 கோடி செலவில் நினைவகம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை போயஸ் கார்டனில் ஜெயலலிதா வகித்த வேதா இல்லம் வீட்டை நினைவு இல்லமாக மாற்றும் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், ஜெயலலிதாவின் உருவப்படத்தை சட்டசபை அரங்கில் வைக்க வேண்டும் என்று அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கோரிக்கை விடுத்தனர். இதை ஏற்று ஜெயலலிதாவின் படத்தை சட்டசபை அரங்கில் அமைக்க முடிவு எடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை சட்டசபை அரங்கில் ஜெயலலிதாவின் உருவப்படத் திறப்பு நிகழ்ச்சி நடந்தது. இதற்காக சட்டசபை நுழைவு வாயில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் வரவேற்றுப் பேசினார். சரியாக 9.43 மணிக்கு ஜெயலலிதாவின் உருவப்படத்தை சபாநாயகர் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து ஓ.பன்னீர்செல்வம், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் பேசினார்கள்.

ஏற்கனவே உள்ள படங்களைப் போலவே ஜெயலலிதாவின் படமும் 7 அடி உயரம், 5 அடி அகலம் கொண்டதாகவும், முழு உருவப் படமாகவும் உள்ளது.

ஜெயலலிதாவின் உருவப் படத்தை கவின் கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் மதியழகன் வரைந்துள்ளார். பச்சைநிற சேலையில் நிற்பது போல படம் உள்ளது. அதில் அமைதி, வளம், வளர்ச்சி என்ற வாசகம் எழுதப்பட்டு உள்ளது.

உருவப்படத் திறப்பு விழாவில் கலந்துகொள்ளுமாறு தி.மு.க. மற்றும் காங்கிரஸ்எம்எல்ஏ.க்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால், தி.மு.க, காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் புறக்கணித்தனர்.

தமிழக சட்டசபை அரங்கில் ஏற்கனவே திருவள்ளுவர், மகாத்மா காந்தி, ராஜாஜி, காயிதே மில்லத், அம்பேத்கர், முத்து ராமலிங்கதேவர், பெரியார், காமராஜர், அண்ணா, எம்.ஜி.ஆர். போன்ற 10 தலைவர்களின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

அந்த வரிசையில் தற்போது 11ஆவதாக ஜெயலலிதாவின் படமும் வைக்கப்பட்டுள்ளது. முதல் பெண் தலைவராக அவரது படம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

# இரும்பு மங்கை மரணம்



இஸ்லாமாபாத், பெப். 13

பாகிஸ்தானின் இரும்பு மங்கை எனப் போற்றப்படும் மனித உரிமை ஆர்வலர் அஸ்மா ஜெகாங்கீர் மரணமடைந்தார்.

பாகிஸ்தானின் 'இரும்பு மங்கை' என்று அழைக்கப்படும் அஸ்மா ஜெகாங்கீர் நேற்றுமுன்தினம் மரணமடைந்தார். 66 வயதான இவர், மாரடைப்புக் காரணமாக மரணமடைந்துள்ளார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

ஜனநாயகத்துக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்தவர் அஸ்மா ஜெகாங்கீர். மிகச்சிறந்த வழக்கறிஞரான இவர் மனித உரிமைகளுக்காகப் போராடி வந்தார். இவர் பாகிஸ்தான் மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர், உச்ச நீதிமன்ற பார் அசோசியேஷனின் தலைவர் என முக்கிய பொறுப்புகளை வகித்து வந்தார். மக்களுக்கு அனைத்து உரிமைகளும் கிடைக்க வேண்டிப் போராடினார். அதற்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவரது மரணத்துக்குப் பல தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தானின் சமூக ஆர்வலர் மலாலா, அஸ்மாவின் மரணம் அனைவருக்கும் மிகப்பெரிய இழப்பு எனக் கூறியுள்ளார். (ஐ)

# உயர்ந்த ஹொட்டல்



உலகின் மிக உயரமான நட்சத்திர ஹோட்டல் ஒன்று துபாயில் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக உயரமான கட்டடங்களின் தலைநகரமாக துபாய் விளங்குகிறது.

இந்நிலையில் துபாயின் சேக் சையது வீதியில் உலகின் மிக உயரமான நட்சத்திர ஹோட்டல் கட்டப்பட்டுள்ளது, 2008ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்டு வந்த இந்த புதிய ஹோட்டல் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளது.

75 மாடிகளுடன் 528 தங்கும் அறைகளைக் கொண்டு பிரம்மாண்டமாக இந்த ஹொட்டல் உருவாக்கப்பட்டுள்ளது. நீச்சல்குளம், உடற்பயிற்சிக் கூடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் இந்த சொகுசு ஹோட்டலில் உள்ளன.

லண்டனின் பிக் பென் கடிகாரம் அல்லது பாரிசின் உலகப் புகழ் பெற்ற ஈபிள் கோபுரத்தை விடவும் இந்த ஹொட்டல் பலமடங்கு பெரியது. உலகின் மிக உயரமான விடுதியாகக் கருதப்படும் துபாயின் ஜே.டபிள்யு. மரியாட் மார்க்குஸ் விடுதியை விடவும் ஒரு மீற்றர் கூடுதலான உயரம் உடையது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பிரம்மாண்டமான ஹொட்டலின் உள்கட்டமைப்பு பார்ப்பவர்களின் மனதைக் கொள்ளையடிக்கும் வகையில் உள்ளது. (ஐ)

# அடுத்தடுத்து துப்பாக்கிச் சூடு ஒருவர் கைவரிசையில் ஐவர் பலி



வொஷிங்டன், பெப். 13

அமெரிக்காவில் அடுத்தடுத்து நடந்த 2 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் பலியான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பெருகி வருகின்றன. இந்த நிலையில் அங்கு கென்டக்கி மாகாணத்தின் வட கிழக்குக் பகுதியில் அடுத்தடுத்து 2 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. அங்கு பெயிண்ட்ஸ் வில்லே என்ற நகருக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் ஒரு வீட்டில் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் அங்கு விரைந்து சென்று பார்த்தபோது அந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குண்டு பாய்ந்து 2 பேர் இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்தனர். அடுத்த சில நிமிடங்களில், பெயிண்ட்ஸ் வில்லேயில் உள்ள ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டிலும் துப்பாக்கிச்சூடு நடந்ததாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அங்கு பொலிஸார் விரைந்தபோது, அந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர் உட்பட 3 பேர் குண்டு பாய்ந்து இறந்து கிடந்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூடுகளை ஜோசப் நிக்கெல் என்பவர்தான் நடத்தி உள்ளார் எனத் தெரிய வந்துள்ளது. எனினும் அவரைப்பற்றிய வேறு தகவல்கள் இல்லை. பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். அதன் முடிவில்தான் அடுத்தடுத்து நடந்த இந்த துப்பாக்கிச்சூடுகளின் பின்னணி என்ன என்பது தெரிய வரும். (ஐ)



# மரணப் படுக்கையில்

## காதலன் கைபிடித்த காதலி

வொஷிங்டன், பெப். 13

அமெரிக்காவில் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து மரணப் படுக்கையில் இருப்பவருக்கு பழைய காதலியுடன் திருமணம் நடந்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்காவில் உள்ள வில்லியம் ஸ்போட் என்ற இடத்தைச் சேர்ந்தவர் டொனால்ட் ஜெட். அதே பகுதியைச் சேர்ந்தவர் ஜூலி. இவர்கள் இருவரும் நீண்டகாலமாக காதலித்து வந்தனர். ஆனால், இந்தக் காதல் நிறைவேறவில்லை. ஜூலி வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். ஆனால் அந்தத் திருமணம் நீடிக்கவில்லை. ஜூலி தனது கணவரை விவாகரத்துச் செய்துவிட்டு தனியாக வாழ்ந்து வந்தார்.

இந்த நிலையில் பழைய காதலன் டொனால்ட்ஜெட் உடல்நிலை பாதிக்கப்பட்டார். அவருடைய இரு சிறுநீரகங்களும் செயல் இழந்தன. இனி அவரால் உயிர்பிழைக்க முடியாது என்று வைத்தியர்கள் அறிவித்துவிட்டனர்.

இதற்கிடையே டொனால்ட் ஜெட்டை ஜூலி பார்க்க வந்தார். அப்போது டொனால்ட் ஜெட் தனது கடைசி ஆசையாக ஜூலியை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார். அதற்கு ஜூலியும் சம்மதம் தெரிவித்தார்.

இதையடுத்து திருமண ஏற்பாடுகள் நடந்தன. டொனால்ட்ஜெட் படுக்கையில் இருந்த நிலையிலேயே அவர்களது திருமணம் நடந்தது. உறவினர்களும், வைத்தியசாலை ஊழியர்களும் அவர்களை வாழ்த்தினார்கள். (ஐ)

# முதலிடத்தைப் பிடிக்கும் முனைப்பில் பெடரர்



ரோட்டர்டாம், பெப். 13

முதலிடத்தைப் பிடிக்கும் முனைப்பில் பெடரர் ரோட்டர்டாம் போட்டியில் ஆடுகிறார். சமீபத்தில் அவுஸ்ரேலிய ஓபனில் பட்டம் வென்று அசத்திய சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் இந்தப் போட்டியில் பங்கேற்கிறார்.

நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் சர்வதேச டென்னிஸ் போட்டி நேற்றுத் தொடங்கியது. இந்தப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், முதல் சுற்றில் தகுதி நிலை வீரர் ருபென் பிமெல்மான்சை (பெல்ஜியம்) எதிர்கொள்கிறார். வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து), கிரிகோர் டிமிட்ரோவ் (பல்கேரியா), அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (ஜேர்மனி) ஆகிய முன்னணி வீரர்களும் களம் இறங்குகிறார்கள்.

தற்போது உலகத் தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள 36 வயதான ரோஜர் பெடரர், இந்தத் தொடரில் அரையிறுதியை எட்டினால் நடாலை (ஸ்பெயின்) பின்னுக்கு தள்ளிவிட்டு மீண்டும் முதலிட அரியணையில் ஏறி விடுவார்.

அவ்வாறு நிகழ்ந்தால், அதிக வயதில் முதலிடத்தைப் பிடித்த வீரர் என்ற மகத்தான பெருமைக்கும் சொந்தக்காரர் ஆகிவிடுவார். (ஐ)

# தரவரிசை சிக்கல்




பார்சிலோனா, பெப். 13

லா லிகா நடப்பு பருவகாலத்தில் தோல்வியைச் சந்திக்காத அணி என்ற பெருமையை பார்சிலோனா அணி தக்கவைத்து வருகிறது. ஆனால், தர வரிசையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பார்சிலோனா தனது சொந்த மைதானமான கேம்ப் நவ்-யில் கெட்டப் அணியை எதிர்கொண்டது. சொந்த மைதானத்தில் பார்சிலோனா வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கெட்டப் அணியின் சிறப்பான தடுப்பு ஆட்டத்தால் பார்சிலோனாவால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் ஆட்டம் கோலின்றி சமநிலையில் முடிந்தது.

இந்த லா லிகா தொடரில் பார்சிலோனாவுக்கு கோலின்றி முடிந்த முதல் ஆட்டம் இதுவாகும். இருந்தாலும் தோல்வியைச் சந்திக்காத ஒரே அணி என்ற பெருமையை தக்கவைத்துள்ளது.

ஆனால் லா லிகா தர வரிசைப் புள்ளிகள் பட்டியலில் அட்லெடிகோ டி மாட்ரிட் அணியைவிட 7 புள்ளிகள் மட்டுமே முன்னிலைப் பெற்று முதல் இடத்தில் உள்ளது. பார்சிலோனா 23 போட்டிகள் முடிவில் 18 வெற்றிகள் 5 சமநிலைகள் மூலம் 59 புள்ளிகளைப் பெற்றுள்ளது. அத்லெடிகோ டி மாட்ரிட் 23 போட்டிகளில் 15 வெற்றிகள் 7 சமநிலைகள், ஒரு தோல்வியின் மூலம் 52 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. ரியல் மாட்ரிட் 22 போட்டிகளில் 12 வெற்றிகள், 6 சமநிலைகள், 4 தோல்விகள் மூலம் 42 புள்ளிகள் பெற்று 4ஆவது இடத்தில் உள்ளது. (ஐ)

# மேலாடை விலகி...



தென்கொரியா, பெப். 13

குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஐஸ் நடனப் போட்டியில் கலந்துகொண்ட வீராங்கனையின் மேல்லாடை விலகிய நிலையில் அதைச் சமாளித்து போட்டியை வெற்றிகரமாக முடித்துள்ளார்.

தென் கொரியாவில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் கடந்த 9ஆம் திகதி தொடங்கியது. இப்போட்டிகள் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐஸ் ஸ்கேட்டிங் நடனப்போட்டியில்தென்கொரியாவின் யுரா மின்- அலெக்சாண்டர் கேமிலின் ஜோடி கலந்து கொண்டு ஸ்கேட்டிங் நடனத்தை மேற்கொண்டார்கள்.

அப்போது திடீரென யுராவின் மேலாடையின் பின்பக்க கொக்கி கழன்றது. எனினும், நடனத்தை நிறுத்தாத யுரா, கீழே இறங்கிய மேலாடையை மீண்டும்மேலே தூக்கிவைத்துக்கொண்டே சமாளித்து நடனமாடி முடித்தார்.

இப்போட்டியில் யுரா - அலெக்சாண்டர் ஜோடிக்கு 51.97 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடம் கிடைத்தது.

போட்டிக்குப் பின்னர் யுரா கூறுகையில்,

“ஆடையில் இருந்த கொக்கி திடீரென கழன்றது, ஆனாலும் நடனத்தை நான் நிறுத்தவில்லை, காரணம் பாதியில் நிறுத்தினால் புள்ளிகள் கழிக்கப்படும். இனி இது போல நிகழாமல் இருக்க நானே என் ஆடையைத் தைத்து கொள்ளவுள்ளேன்” என கூறியுள்ளார். (ஐ)

# தயாசிறி விலகுவார்?

கொழும்பு, பெப்.13

இலங்கை உள்ளூராட்சித் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பொறுப்பேற்று விளையாட்டுதுறை அமைச்சர் பொறுப்பை தயாசிறி ஜயசேகரா ராஜினாமா செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் நடந்து முடிந்துள்ள உள்ளூராட்சி தேர்தலில் மஹிந்த ராஜபக்சவின் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரா பதவி விலகவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது தொகுதியில் சுதந்திரக் கட்சி தோல்வியடைந்ததற்கு பொறுப்பேற்றே அவர் அமைச்சுப் பதவியை ராஜினாமா செய்யவுள்ளாராம்.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் தலைவர் திலங்க சுமதிபாலாவுடன் தயாசிறி நெருக்கமான தொடர்புடையவர் எனவும் கூறப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (அ)



# அபூர்வமான பழிக்குப் பழி



ஷார்ஜா, பெப்.13

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் போட்டியில் சிம்பாப்வே அணி,எப்படி முதலாவது போட்டியில் தோல்வியடைந்ததோ அதேபோன்ற ஓட்ட எண்ணிக்கையால் வெற்றி பெற்ற அபூர்வ சம்பவம் நடந்துள்ளது.

ஷார்ஜாவில், ஆப்கானிஸ்தான் மற்றும் சிம்பாப்வே அணிகள் மோதும் ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இவ்விரு அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி, கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பாட்டம் செய்த ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 333 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் ஆடிய சிம்பாப்வே அணி, 34.4 ஓவர்களில் 179 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இதன் மூலம், ஆப்கானிஸ்தான் அணி 154 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ரஷித் கான் 4 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

இந்த நிலையில், இவ்விரு அணிகளும் மோதிய 2வது ஒருநாள் போட்டி நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய சிம்பாப்வே அணி, 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 333 ஓட்டங்கள் குவித்தது.

அதிகபட்சமாக பிரென்டன் டெய்லர் 125 ஓட்டங்களும், சிகந்தர் ரசா 92 ஓட்டங்களும் எடுத்தனர். பின்னர் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி, 30.1 ஓவர்களில் 179 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம், சிம்பாப்வே அணி 154 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சிம்பாப்வே அணித்தலைவர் க்ரீமர் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி எவ்வளவு ஓட்டங்கள் எடுத்து(333ஓட்டங்கங்கள்), சிம்பாப்வே அணியை எவ்வளவு ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியதோ(154 ஓட்டங்கள் ), அதே போல இரண்டாவது போட்டியில் சிம்பாப்வே அணி அதே ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை வீழ்த்தியுள்ளது.

இந்தப்போட்டியின் நாயகனாக பிரென்டன் டெய்லர் தெரிவானார். (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 13.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.